செய்தி வெளியீடு எண்:250 நாள்:21.05.2009

**<u>இராணுவத்தில் ஆள் சேர்ப்பு முகாம்</u>**

**இந்திய இராணுவத்தில் ஆள் சேர்ப்பு முகாம் வரும் 10 ஜுன் முதல் 16 ஜுன் 2009 வரை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நடைபெற உள்ளது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மற்றும் பாண்டிச்சேரியை சார்ந்த நபர்கள் தேர்வு செய்யப்படுவர்.**

**சோல்ஜர் டெக்னிகல், சோல்ஜர் நர்சிங் அசிஸ்டண்ட் மற்றும் சோல்ஜர் ஜெனரல் டியூட்டி ( 12வது வகுப்பு தேர்ச்சி) – இது ஒரு புதிய கேட்டகிரியுடன் சிம்பில் பாஸ் 10+2 / இண்டர்மீடியட் படிப்பில் பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, கணிதம் மற்றும் ஆங்கிலம். சோல்ஜர் ஜெனரல் டியூட்டி மற்றும் சோல்ஜர் டெக்னிக்கல் அனைவருக்கும் ஒரே மாதிரியான எழுத்துத் தேர்வுக்கான தேர்வு நடைபெறும்.**

**மெட்ரிக் / 10ம் வகுப்பு தேர்ச்சி, சோல்ஜர் ஜெனரல் டியூட்டி நபர்களக்கு வேலூர், கடலூர், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு 11 ஜுன் 2009 அன்று ஸ்கிரீன் டெஸ்ட் நடைபெறும். மெட்ரிக் / 10ம் வகுப்பு தேர்ச்சி – சோர்ஜர் ஜெனரல் டியூட்டி நபர்களுக்கு திருவண்ணாமலை, விழுப்புரம், சென்னை மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு 12 ஜுன் 2009 அன்று ஸ்கிரீன் டெஸ்ட் நடைபெறும்.**

**டிரேட்ஸ்மென் – அனைத்து 8 மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு 13 ஜுன் 2009 அன்று ஸ்கிரீன் டெஸ்ட் நடைபெறும். சேர்ல்ஜர் கிளார்க் மற்றும் ஸ்டோர்கீப்பர்களுக்கு 14 ஜுன் 2009 அன்று ஸ்கிரீன் டெஸ்ட் நடைபெறும்.**

**

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.